



# நகர் ஊரமைப்புத்துறை (DTCP)
## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்
## பெரியவாளவாடி ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பெரியவாளவாடி ஊராட்சி மற்றும் கிராமம், க.ச.எண்: 132/2 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லாபகுதி)

இணையதள விண்ணப்ப எண்: ETGZA0FX, நாள்.15.11.2023

அளவுத் திட்டம்: 1 :500

வ

**குறிப்பு :**

மனைப்பிரிவின் பரப்பளவு : 2.23 ஏக்கர் (அ) 9028.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 34

மனைப்பிரிவு எல்லை

நிலையிலுள்ள சாலை/ அணுகுசாலை

மனைப்பிரிவு சாலை

**பொது ஒதுக்கீடுகள்:**

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

I. மனைப்பிரிவின் சாலை பரப்பு : 2534.57 ச.மீ

II. பூங்கா

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு: (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)x10%
= (9028.00 - 2534.57)x10% = 649.34 ச.மீ

ii)TNCDBR - 2019 விதி 47(6)-ன் படி பூங்கா (OSR 10%) பரப்பு 649.34 ச.மீக்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பு தொகை ரூ-1,25,322.00 /- நாள் - 27.12.2023 - ல் மனுதாரரால் உரிய அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

III. பொது உபயோகம் (மனைப்பிரிவின் மொத்தபரப்பில் சாலை பரப்பு நீங்கலாக 1% )

(A) LOCALBODY - க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு ( 9028.00 - 2534.57 x 0.5 % = 32.47 ச.மீ (0.50 %)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 41.38 ச.மீ (0.64 %)

(B) TANGEDCO - க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு ( 9028.00 - 2534.57 x 0.5 % = 32.47 ச.மீ (0.50 %)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 40.90 ச.மீ (0.63 %)

**மூலை முடக்கு :-**

12.0மீ வரை அகல வரையிலான சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
12.0 மீ மேல் உள்ள சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ -ம் விடப்படல் வேண்டும்.

**கட்டிட வரம்பு :-**

9.0 மீ அகல வரையிலான சாலைகளுக்கு 1.50மீ -ம் விடப்படல் வேண்டும்.
9.0 மீ முதல் 18.0மீ அகல வரையிலான சாலைகளுக்கு 3.0மீ -ம் விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள்.31.01.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளபட வேண்டும்.
2. அரசாணை எண். 181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020- மற்றும் அரசாணை எண். 141 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மலைநீர் வடிகால் வசதி, மேல்நலை நீர்தேக்கத்தொட்டியுடன் கூடிய வசதிகள் மற்றும் தெருவிளக்கு வசதிகள் ஆகியனவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியபட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைகுண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

**SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO.346/2023**

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Tiruppur
Date:2023.12.29 18:1